**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No.102/2017 |
| Deposition of witness | PW- 19 /LW- 21 |
| Name | திரு. பாரதிதாசன் (காவல் ஆய்வாளர்) |
| Father's Name | திரு. விஸ்வநாதன் |
| Village | இரண்டாம்புலிக்காடு |
| Taluk | பட்டுக்கோட்டை |
| Age | 43/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 6th day of August 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி Bench Clerk Grade III என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது நாகப்பட்டிணம் மாவட்டம் வாய்மேடு கா.நி-ல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2016 அன்று வாட்டாதிக்கோட்டை கா.நி-ல் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாட்டாதிக்கோட்டை கா.நி தலைமை காவலர் திருமதி. சாந்தி என்பவர் பதிந்த குற்ற எண் 33/2016 ச/பி 186, 189, 506(2) இதச வின் கீழ் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிமேகலை, மல்லிகா, குணசேகரன், மகாலிங்கம், மதியழகன், ஆவுடைதேவர், பொன்னையன், ஐயாசாமி தேவர், ராமசாமி, காந்திநாதன், சுப்பிரமணி, மேரிஜெமிலா ஆகியோரை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திருமதி.சாந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சாட்சி 1 தேன்மொழியிடமிருந்து நீதிமன்ற warrant -ஐ சாட்சிகள் சுப்பிரமணியன், மேரிஜெமிலா முன்னிலையில் 11.04.2016 அன்று 14.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நீதிமன்ற

warrant -ஐ நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். எதிரிகள் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. பின்பு சாட்சிகளின் விசாரணையின் பேரிலும், எனது விசாரணையிலும் சம்பவம் உண்மை என்பதால் எதிரிகள் சரஸ்வதி, சுரேந்தர், கார்த்திகா ஆகியோர் மீது ச/பி 294(b), 186, 189 இதச வின் கீழ் மற்றும் எதிரி 2 ராசு மீது ச/பி 294(b), 186, 189, 506(2) இதச வின் கீழ் 10.05.2016 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை நான் மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 8 முதல் 11 வரை உள்ளவர்களை நான் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சாட்சிகளின் ஊரில் வைத்து விசாரித்தேன். பட்டியல் 8, 10 சாட்சிகள் திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார்கள் என்றாலும், நான் அவர்களை விசாரிக்காமல் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நீதிமன்ற தொடர்பானது என்பதால் நான் நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. அ.சா. 1 அதம்பை கிராமத்தை சேர்ந்தவர் என்று என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், அதே ஊரு வேற தெருவை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளுக்கும், பட்டியல் சாட்சிகள் 8 முதல் 11 வரை உள்ளவர்களுக்கும் நீதிமனறத்தில் உரிமையியல் வழக்கு உள்ளது என்று என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். பட்டியல் சாட்சிகள் 12 முதல் 15 வரை உள்ளவர்களை நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ப.சா. 17 காந்திநாதனை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் பட்டுக்கோட்டை வழக்கறிஞர் சங்க அலுவலகம் முன்பாக வைத்து விசாரித்தேன்.

ப.சா. 17 காந்திநாதனை நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ப.சா. 16 -மிருந்து நீதிமன்ற ஆணையை நான் பெறவில்லை என்றாலும், மகசரில் கைப்பற்றிவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 மிருந்து நீதிமன்ற ஆணையை பெற்றுவிட்டு ப.சா. 16 -மிருந்து கைப்பற்றியதாகவும், ப.சா. 18,19 முன்னிலையில் மகசரில் கைப்பற்றியதாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் கா.நி-ல் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ப.சா. 8 முதல் 19 வரை உள்ளவர்களின் ச/பி 161 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து (Hand Writing) என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் ஊரில் யாரையும் விசாரிக்காமல் தலைமை காவலர் தயார் செய்து வைத்ததை கையொப்பம் செய்துவிட்டு மேலெழுந்த வாரியாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை